# அருப்புக்கோட்டை நகராட்சி

**விகாரி ஆண்டு ஐப்பசி மாதம் நாள் : 22.10.2019 செவ்வாய்க் கிழமை மாலை 4.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் தனி அலுவலர் அறையில் நடைபெற்ற நகர்மன்ற சிறப்பு கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை :– திரு.S.புவனேஸ்வரன் (எ) அண்ணாமலை., தனி அலுவலர்**

**பொருள் 1** :விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை நகராட்சியின் 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மொத்த மக்கள் தொகை 87722 ஆகும். இந்நகராட்சியில் மொத்தம் 36 வார்டுகள் உள்ளன. நகரின் மொத்த பரப்பளவு 14.96 சதுர கி.மீ, சாலைகளின் மொத்த நீளம் 104.56 கி.மீ இந்நகராட்சி பகுதிகளில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள திட்ட விபரப்படி வார்டு பகுதிகளில் உள்ள சேதமடைந்த சாலைகளை உடன் சீர மைக்க தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்ட நிதியின் கீழ் (TURIP 2019-20) மான்ய நிதியுதவி கோரி நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களுக்கு திட்டபிரேரணை சமர்பிக்கப்பட்டது.

**திட்டவிபரம்**

| வ. எண் | வார்டு எண் | பணியின் பெயர் | நீளம் (மீட்டர்) | அகலம் (மீட்டர்) | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|---|---|
| 1. | 4, 9, | நெசவாளர் காலனி 1வது தெரு, நெசவாளர் காலனி தொடக்கப்பள்ளி ரோடு, நெசவாளர் காலனி மேல்நிலைப்பள்ளி ரோடு (வெஙகடேஸ்வரா நகர்), தேவாடெக்ஸ், தேவாடெக்ஸ் காலனி ஆகிய பகுதிகளில் தார் சாலை அமைக்கும் பணி | 1520 | 5.00 | 100.00 |
| 2. | 16, 28 | எஸ்.பி.கே. கல்லூாரி சாலை ரோடு, நாகலிங்க நகர் ஆகிய பகுதிகளில் தார் சாலை அமைக்கும் பணி | 1670 | 5.00 | 100.00 |
| 3. | 12, 8, 28 | என்.எம்.வி.சுப்பன் தெரு, உஜ்ஜி தெரு, மயிலாடும் தெரு, மலையரசன் கோவில் மெயின் தெரு, SR தெரு ஆகிய தெருக்களில் மழைநீர் வடிகாலுடன் கூடிய பேவர் பிளாக் தளம் அமைக்கும் பணி | 1210 | 4.00 | 100.00 |
| 4. | 1, 9 | சாமி நாயக்கர் தெரு, பாம்பலம்மன் கோவில் வடக்கு தெரு, பாம்பலம்மன் கோவில் தெரு, ரஙகப்பன் தெரு, ஜோதிபுரம் தெரு, திருவள்ளுவர் காலனி தெரு ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகாலுடன் கூடிய பேவர் பிளாக் தளம் அமைக்கும் பணி | 1452 | 4.00 | 100.00 |
| 5. | 4, 5, 6 20 | அன்பு நகர் 7வது, 9 வது தெரு, சண்முகநாதபுரம் 5வது, 6வது தெரு, முஸ்லீம் வடக்கு தெரு (நல்லூார் முஸ்லீம் பள்ளிவாசல்), மலையரசன் மூப்பனார் தெரு, மகாலிஙக மூப்பனார் தெரு ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகாலுடன் கூடிய பேவர் பிளாக் தளம் அமைக்கும் பணி | 980 | 6.50 | 100.00 |
| | | **மொத்தம்** | | | **500.00** |

மேற்கண்ட பணிகளுக்கு தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்ட மானிய நிதி 1.00 கோடி, மாநில நிதிக்குழு/மத்திய நிதிக்குழு மானிய நிதி/நில அபிவிருத்திக்கட்டணம் ரூ.3.50 கோடி மற்றும் நகராட்சி பஙகளிப்பு ரூ.0.50 கோடி என நிதி ஒதுக்கீடு விபரம் தெரிவித்து நிர்வாக அனுமதி வழஙகும் பொருட்டு மன்றத் தீர்மானம் அனுப்பக்கோரி நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.17349/2019/இ3 நாள் 03.09.2019 ல் தெரிவிக்கப்பட்டது.

மேற்கண்ட பணிகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதிகளில் நகராட்சி பஙகளிப்பு மற்றும் மாநில நிதிக்குழு/மத்திய நிதிக்குழு மானிய நிதி/நில அபிவிருத்திக்கட்டணத் தொகையையும், நகராட்சி நிதி நிலையை கருத்தில்கொண்டு நகராட்சியால் வழஙக இயலாத நிலை இருந்தால் மேற்கண்ட திட்டத்திலிருந்து இந்நகராட்சிக்கு விலக்கு அளிக்ககோரி இந்நகர்மன்ற தீர்மான எண் 780 நாள் 11.10.2019ன்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு சமர்பிக்கப்பட்டது. ஆனால் மேற்படி சாலைகள் அனைத்தும் பிரதான சாலையாக உள்ளதால் உடனடி சீரமைப்பு தேவையான நிலையில் உள்ளதாலும் தற்போது முத்திரைதாள் பதிவு கட்டணமாக ரூ.10,41,87,231/– இந்நகராட்சிக்கு வரப்பெற்றதாலும் மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள உரிய நிர்வாக அனுமதி மற்றும் தொழில் நுட்ப அனுமதி பெற்று மேற்குறிப்பிட்டுள்ள நகராட்சி பஙகு தொகையுடன் தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்ட நிதி (TURIP 2019-20) கீழ் சாலை பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.2420/2018/இ1

**<u>தீர்மானம் :</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.785</u>**